**செய்தி வெளியீடு எண்: 227** **நாள்: 13.04.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

"விஷு தின" வாழ்த்துச் செய்தி

மலையாள மொழி பேசும் மக்கள் கொண்டாடும் புத்தாண்டு திருநாளாம் "விஷு" திருநாளில், மலையாள மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் தங்கள் பாரம்பரிய மரபுகளை விடாது பேணிப் பின்பற்றி வாழும் மலையாள மக்கள் விஷு பண்டிகையன்று தங்களது இல்லங்களில் அதிகாலை கண் விழித்து அரிசி, காய்கனி வகைகள், கண்ணாடி, கொன்றை மலர், தங்க நாணயங்கள் போன்றவற்றைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட விஷுக்கனியை கண்டு, வரவிருக்கும் ஆண்டு குறைவற்ற செல்வத்தையும், அளவற்ற மகிழ்ச்சியையும், நோயற்ற வாழ்வையும் வழங்க வேண்டும் என வேண்டி வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இப்புத்தாண்டினைக் கொண்டாடும் மக்களின் மனங்களில் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கட்டும், அமைதியும், சகோதரத்துவமும் தழைக்கட்டும் என்று வாழ்த்தி, மலையாள மக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது "விஷு" திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**